**கவனிக்க** .- *03.01.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1845 - 2014 ජනවාරි මස 10 වැනි සිකුරාදා - 2014.01.10

*1845 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 14 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, சனவரி மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, சனவரி மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## பேடின் த சில்வா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

எம். கே. என். மனுஷ நாணாயக்கார, பா. உ., ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "பேடின் த சில்வா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான சட்டம்" என அறிமுகப்படுத்தப்படும் சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு உத்தேசிப்பதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

இச்சட்டமூலத்தின் நோக்கமாவது : கீழ் குறிப்பிடப்படும் பொது நோக்கங்களைக்கொண்ட பேடின் த சில்வா மன்றத்தைக் கூட்டிணைப்பதேயாகும்:-

1. நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு கடமையில் ஈடுபட்டிருக்கும் யாரேனும் அலுவலர் ஒருவருக்கு அல்லது ஊழியர் ஒருவருக்கு புலமைப் பரிசில் ஊடாக உதவி வழங்கல் மற்றும் இலங்கையினுள் மற்றும் இலங்கைக்கு வெளியே காணப்படும் இதனையொத்த நிறுவனங்களுடன் ஒத்துழைப்பு, புரிந்துணர்வு மற்றும் நட்புறவை விருத்தி செய்தல் ;

2. இனம் மற்றும் மதம் பற்றி கவனத்திற் கொள்ளாது பொது மக்களிடத்தில் புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பினை விருத்தி செய்தல் ;

3. சூழலைப் பாதுகாத்தல், முகாமைப்படுத்தல் மற்றும் அதனைப் பேணுவதற்கான கருத்திட்டங்களை ஆரம்பித்து செயற்படுத்தல் ;

4. நூலகங்களை அமைத்து அவற்றைக் கொண்டு நடாத்துதல் மற்றும் புத்தகங்கள், இதழ்கள், நினைவு மலர்கள் மற்றும் சஞ்சிகைகள் என்பவற்றுக்கு பங்களிப்பினைச் செலுத்துதலும் அவற்றை வெளியிடல் மற்றும் மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்குத் தேவையான அதனோடு தொடர்புடைய அல்லது நன்மை பயக்கக்கூடிய ஏனைய அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளல்

பிறவும்.

எம். கே. என். மனுஷ நாணயக்கார,
பாராளுமன்ற உறுப்பினர்,
காலி மாவட்டம்.

1-342

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.